சுருக்கம்

வரவு செலவு – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – கோரிக்கை எண்.34 – 2011 –12ம் ஆண்டு அறிவிப்புகள் – மாநிலம் முழுவதும் நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளில் திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாதவாறு உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை**

**அரசாணை (நிலை) எண்.153** நாள்: 15.10.2011

படிக்க:

1. வரவு செலவு – 2011 –2012 – மானிய கோரிக்கை எண். 34, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்பு எண்.5.
2. கடித எண். 12516/வரவு செலவு–2/2011–4, நாள் : 12.8.2011.
3. அரசு கடித எண். 25499/நநி 2/2011, நாள் : 13.10.2011.

- - - -

ஆணை:

தமிழ்நாட்டில் நகர்ப்புர மற்றும் உள்ளாட்சிப் பகுதிகளில் திறந்தவெளிகளில் மனிதக்கழிவு கழிக்கும் செயல் சுகாதாரக்கேட்டை ஏற்படுத்துகிறது. மொத்த மக்கள் தொகையில் 50% மக்களுக்கு கழிவறை வசதிகள் கிடைக்கவில்லை என ஒரு கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இதுவே திறந்தவெளி மனிதக் கழிவு கழிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான இடங்களை கணக்கெடுத்து அவ்விடங்களில் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி அவற்றை பராமரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் தக்க ஏற்பாடுகளைச் செய்வதே இதற்குரிய தீர்வாகும்.

2. இதன் பொருட்டே, 2011–12 ஆம் ஆண்டு, வரவு செலவு திட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மான்ய கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை) அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை செய்துள்ளார்.

"திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலையை 2015 க்குள் ஒழிப்பதை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தீர்வாக இவ்வாறான இடங்களைக் கண்டறிவதும் இதற்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதும், அவற்றை பராமரிப்பதும் ஆகிய அடிப்படைக் கட்டமைப்புகளைத் தொடர்ச்சியாக செயல்படுத்தி 2015–க்குள் இம்மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளில் திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாதவாறு உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்''.

3. மேற்காணும் இவ்வறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளில் திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாதவாறு உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோருக்கு இணைப்பில் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்கை அளவிலான அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4. திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் இடங்களை கண்டறியும் ஆய்வினை உடனடியாக மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் கேட்டுகொள்ளப்படுகிறார்கள், அவ்வாறு கண்டறியப்பட்ட இடங்களில் பொதுகழிப்பிடங்கள் ஏற்படுத்துவதற்குரிய இடங்களைத் தேர்வு செய்யுமாறும், அதற்கான திட்ட மதிப்பீடு மற்றும் இவ்விடங்களுக்கான விளக்கு மற்றும் தண்ணீர்வசதி உள்ளிட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்து உரிய நிதி ஆதாரங்களின் விவரத்துடன் நிர்வாக அனுமதி பெற பிரேரணைகள் முன்னுரிமை செய்து 2011–12, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆண்டுகளில் எடுக்கப்பட வேண்டியவை குறித்து அரசுக்கு 15.12.2011 க்குள் கருத்துரு அனுப்பிடுமாறும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5. ஏற்கனவே இடங்கள் தேர்வு இறுதி செய்யப்பட்டு உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டத்தை 2011 –12 நிதி ஆண்டில் மேற்கொள்ள ஏதுவாக அதற்குரிய கருத்துருக்களை நிர்வாக அனுமதிக்காக 15.11.2011 க்குள் அரசுக்கு அனுப்பிவைக்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கருத்தையா பாண்டியன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
ஆணையர்,
சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 108.
நகல்
செயலாளரின் நேர்முக செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவுசெலவு /அ.ந.2) துறை, சென்னை – 9.

-/ஆணைப்படி அனுப்பபடுகிறது/-

18/10/11
பிரிவு அலுவலர்

15/10/11

இணைப்பு

அரசாணை(நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள் 15.10.2011.

இத்திட்டத்தை மேற்கொள்ளுவதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகள்

| | | |
|---|---|---|
| 1. | திறந்தவெளி மனிதக் கழிவு கழிக்கும் இடங்களை கண்டறியும் ஆய்வினை முடிக்க வேண்டிய தேதி | 31.10.2011 |
| 2. | கழிப்பிடங்கள் கட்ட இடங்களை தேர்வு செய்து முடிக்கவேண்டிய தேதி | 15.11.2011 |
| 3. | கழிப்பிடங்கள் கட்ட திட்ட மதிப்பீடுகள் தயாரித்து அனுப்பவேண்டிய தேதி | 30.11.2011 |
| 4. | இதற்கான நிதி ஆதாரங்களை கண்டறிந்து பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்து நிர்வாக அனுமதிக்காக அரசுக்கு அனுப்ப வேண்டிய தேதி | 15.12.2011 |

// உண்மை நகல் //

15/10/11

பிரிவு அலுவலர்

15/10/11